# புதியதோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு வழிகாட்டும் இயேசுவின் தொடர்பாடல் உத்திகள்

- சூ. யூட் டினேஸ் கொடுதோர்
(விரிவுரையாளர், ஊடகக் கற்கைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)

'தொடர்பாடல்' என்பது உலகில் உயிரினங்கள் தோன்றியது முதல் காணப்படும் ஒரு தேவைப்பாடாகும். ஒருவர் தனது சிந்தனை, எண்ணம், உணர்வுநிலை, மனநிலை மற்றும் கருத்துக்கள் போன்றவற்றைப் பிறரிடம் எடுத்துக் கூறும் செயற்பாடே தொடர்பாடல் ஆகும். உலகில் வாழும் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். அவரவர் தத்தம் அரசியல், சமூகம், பண்பாடு, அறிவு, ஆளுமை, வயது முதிர்ச்சி மற்றும் அனுபவம் போன்றவற்றை கைக்கொண்டு தனித்துவமான முறையிலே தொடர்பாடலை மேற்கொள்கின்றனர். மெசியாவாக, மானிடமகனாகப் பிறப்பெய்திய இயேசுவும் தான் வாழ்ந்த அரசியல், சமூக, பண்பாட்டுச் சூழலிலே தன்னை மெசியாவாக நிருபிப்பதற்கும், தான் உலகிற்கு வந்த காரணத்தை எடுத்தரைப்பதற்கும், மண்ணுலகில் இறையரசைக் கட்டியெழுப்புவதற்கும் பல்வேறு தனித்துவமான தொடர்பாடல் உத்திகளைக் கையாண்டுள்ளார். இன்றைய நவீன யுகத்தில் ஒருவர் வெற்றியாளராய்த் திகழ முறையான, தர்க்கரீதியான தொடர்பாடல் உத்திகளைக் கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டும். அந்த வகையில் புதியதோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு வழிகாட்டும் இயேசுவின் தொடர்பாடல் உத்திளைக் கண்டறிய வேண்டியது காலத்தின் தேவையாகும். அந்தவகையில் இயேசு கையாண்ட தொடர்பாடல் உத்திகளைக் கண்டறிவதே இந்த ஆய்வின் பிரதானமான நோக்கமாகும். இயேசுவின் வாழ்வைத் தனித்துவமாகக் கூறுகின்ற யோவான் நற்செய்தியை ஆய்வு மூலமாகக் கொண்டு இந்த ஆய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. இதன் இரண்டாம் நிலைத் தரவுகளாக இந்த ஆய்வுத் தலைப்புடன் தொடர்புடைய நூல்கள், ஆய்வு நூல்கள், கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றன எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது விபரண ஆய்வு, பகுப்பாய்வு போன்ற ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது, குறிப்பாக யோவான் நற்செய்தியில் மறைந்துகிடக்கும் இயேசு கையாண்ட தொடர்பாடல் உத்திகளை வெளிக்கொணர்வதற்கு பகுப்பாய்வு முறையியலும், அவரின் தொடர்பாடல் சிந்தனைகளை விபரிப்பதற்கு விபரண ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வுகள் வெற்றிகரமான தொடர்பாடல் உத்திகளை இனங்காண உதவுவதோடு, இயேசு கையாண்ட தொடர்பாடல் உத்திகள் மூலம் வெளிப்படும் அவரது எண்ணப்பாங்கு, மனநிலை, சமயோசிதம் போன்ற பண்புகளைப் பட்டியற்படுத்தவும் முடியும். இத்தகைய ஆய்வுகள் மூலம் உலகப் பொதுமையாகக் கருதப்படும் "தொடர்பாடல்" பற்றிய சிந்தனைப் போக்கு விவிலியத்திற்கும் பொருந்தி வரும் உண்மை வெளிக்கொணரப்படுவதோடு, நற்செய்திகளில் பொதிந்துகிடக்கும் ஆழமான அறிவார்ந்த தொடர்பாடல் சிந்தனைகளை வெளிக்கொணர முடியும் எனலாம்.

**திறவுச் சொற்கள்: இயேசு - மனிதநேயப் பண்பாடு - தொடர்பாடல் உத்திகள் - வெளிப்பாடு**

## 1.0 ஆய்வறிமுகம்.

மனிதநேயப் பண்புகள் மடிந்துவரும் இக்காலச் சூழலில் புதியதோர் கிறிஸ்தவப் பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தொடர்பாடலை சரிவரக் கட்டமைக்க வேண்டியது கடப்பாடக உள்ளது. நவீன தொடர்பாடல் சாதனங்களின் வருகையும், அவற்றின் அதீத பயன்பாடும் ஈழத்தைப் பொறுத்தவரை சுயபண்பாட்டு இழப்பிற்கு வழிகோலுவதனை அவதானிக்கலாம்.

உலகளாவிய ரீதியில் மக்கள் எதிர்நோக்கும் பெரும் பிரச்சினையாக சமூகத் தொடர்பாடல் ஊடகங்கள் மனிதநேயப் பண்பாட்டை சீரழிக்கின்றன என்பதே அமைந்துள்ளது. இதன் தாக்கம் ஈழத்து கத்தோலிக்க சமூகத்திற்கு விதிவிலக்கானது அல்ல. 'மாற்றம் ஒன்றே மாறாதது' என்ற கோட்பாட்டு விதிமுறைகளுக்கு அமைய மாற்றங்களை உள்வாங்கினாலும் மனிதநேயப் பண்பாட்டை கட்டியெழுப்புவது எப்படி? என்றவினா இன்றைய சமூக ஆர்வலர்களின் ஆதங்கமாக எழுந்து நிற்கின்றது. எனவே இந்த ஆய்வானது இழந்து போகும் மனிதநேயப் பண்பாட்டைப் பேணிக்காத்து எழுந்துநிற்கும் சவால்களுக்கு முகங்கொடுத்து; புதியதோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண்பாட்டை வளர்த்தெடுப்பது குறித்து ஆராய்வதாக அமைகின்றது.

### 1.1 மனிதநேயப் பண்பாட்டில் தொடர்பாடல்.

தொடர்பாடல் என்பது மனிதனின் அத்தியவசியத் தேவைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஒருவர் தமது எண்ணம், சிந்தனை, கருத்து, உணர்ச்சி போன்றவற்றை மற்றவருடன் பகிர்ந்து கொள்வதனையே தொடர்பாடல் என்ற பதம் குறித்து நிற்கின்றது.

மனிதன் ஒரு சமூகப் பிராணி அந்த வகையில் அவன் பிறரோடு தொடர்பாடலை மேற்கொள்வதன் ஊடாகவே வாழ்வின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடியும். இருப்பினும் தொடர்பாடலை யாரோடு, எவ்வாறு, எவ்வேளையில், எவ்விதம் மேற்கொள்ள வேண்டும் என்ற அறிவின்மையால் தொடர்பாடல் பல உறவுமுறிவுகளை ஏற்படுத்திவிடுகின்றது.

மனிதன் எப்போதும் குழுவாகவே வாழ விரும்புகின்றான். அவன் தனது அங்கத்தவர்களிடையேயும், குழுக்களுக்கு இடையேயும் தொடர்பாடலை மேற்கொள்ளத் தலைப்பட்டான். இதன் காரணமாகவே தொடர்பாடல் விருத்தியடைந்தது. தொடர்பாடல் பற்றி நோக்கும் போது, இது குறிப்பிட்ட ஊடகம் ஒன்றைப் பயன்படுத்தி தகவல்களை அல்லது செய்திகளை அனுப்புகின்ற செயற்பாடாகும். இங்கு ஓர் தகவலை அனுப்புநர் ஓர் ஊடகத்தின் ஊடாக அனுப்பும் போது அது பெறுநரை சென்றடைகின்றது. எல்லா சந்தர்ப்பங்களிலும் தொடர்பாடல் ஒன்றினை மேற்கொள்வதற்கு அனுப்புநர், தகவல், ஊடகம் மற்றும் பெறுநர் போன்ற கூறுகள் அவசியமாகின்றன.

தொடர்பாடலில் உரையாடல், பாடல், உரைநடை, அங்க அசைவுகள், சைகைகள், தொடுகைகள், பார்வைகள், ஓவியங்கள், வரைபடங்கள் மற்றும் குறியீடுகள் போன்ற வாய்மொழி சார்ந்த, சாராத ஊடகங்களை கண்டுகொள்ள முடியும்.

### 1.2 யோவான் நற்செய்தி - ஆசிரியத்துவமும் நோக்கமும்.

'மனிதரான வாக்கே இயேசு' எனத் தொடக்கத்திலேயே எடுத்துரைக்கின்றார் நூலாசிரியர். அவரது இயல்பை ஒளி, வாழ்வு, வழி, உண்மை, உணவு போன்ற உருவகங்களால் விளக்கி இயேசு யார் என்பதை எல்லாக் கால, இட, சமய, பண்பாடு மக்களுக்கு எளிதில் புரியவைக்கின்றார்.

அழைத்தல், கோவில், வழிபாடு, திருமுழுக்கு, நற்கருணை ஆகிய கிறிஸ்தவ கருத்துக்களின் ஆழ்ந்த பொருளை இந் நற்செய்தி விபரிக்கின்றது. அரும் அடையாளங்களாலும், அவற்றைத் தொடர்ந்துவரும் உரைகளாலும் இயேசுவை வெளிப்படுத்தி அவர் பெற்ற ஏற்பையும், எதிர்ப்பையும் எடுத்துக்காட்டி நிற்கின்றார் இதன் ஆசிரியர் யோவான். மகனுக்கும் - தந்தைக்கும், மகனுக்கும் - சீடருக்கும் உள்ள நெருங்கிய உறவு பற்றி சித்திரிப்பதாக இந் நற்செய்தி அமைந்து நிற்கின்றது.

இயேசு துன்பங்கள் பட்ட போது அவரை நொறுக்கப்பட்ட துன்புறும் ஊழியனாக அல்ல, மாறாக அனைத்தையும் திட்டமிட்டச் செயற்படுத்தும் வெற்றி வீரனாக படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளார். இந் நற்செய்தியில் கூறப்படும் இயேசுவின் உரைகள், செயல்கள், அவரைக் குறித்த செயல்கள், அவருடைய ஆளுமை, அவரது பணித்தளம் ஆகிய அனைத்துமே இந் நற்செய்தியை ஒத்தமை நற்செய்திகளில் இருந்து வேறுபடுத்தி காட்டுவதாக அமைந்துள்ளது.[1]

இந் நற்செய்தியின் ஆசிரியர் குறித்து நோக்கும் போது இந் நற்செய்தியின் முன்னுரையிலே பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

இயேசுவின் அன்புச் சீடரான யோவாவின் முதலில் திருமுழுக்கு யோவானின் சீடராக இருந்து பின் இயேசுவின் சீடராகியது (1:35-39). இயேசுவோடு மிகுந்த நெருக்கம் கொண்டிருந்த மூன்று திருத்தூதருள் இவருள் ஒருவர். (மாற் 5:37, 9:2, 13:3, 14:33). இறுதி இராவுணவின் போது இயேசுவின் மார்புப் பக்கமாய் சாய்ந்திருந்த இவர் (13: 22-26) மற்றத் திருத்தூதரெல்லாம் ஓடிவிட்ட நேரத்திலும் சிலுவையடியில் நின்றார். இவரிடமே இயேசு தம் அன்பு அன்னையை ஒப்படைத்தார்.[2] என்று கூறப்படுவதனைக் காணலாம். இதனூடாக இயேசுவின் தொடர்பாடலிலே ஒரு அங்கத்தவராயும் அவரது தொடர்பாடலினை நேரடியாக கண்டசாட்சியாகவும், தொடர்பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பங்களை சான்று பகர்பவராகவும் இந் நற்செய்தியாளரைக் கொள்ளலாம்.

இந் நற்செய்தியின் நோக்கத்தினை ஆய்வு செய்கின்ற போது இந் நற்செய்தியின் முன்னுரை பின்வருமாறு கோடிட்டுக் காட்டுகின்றது. ‘‘இயேசுவே இறைமகனாகிய மெசியா நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந் நூலில் உள்ளவை எழுதப்பெற்றுள்ளன.’’ (20 : 31) என்று ஆசிரியரே இந் நூலின் நோக்கத்தை தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்.[3]

ஆழமான கருத்தாளமும், இறையியல் கருத்துக்களும் இடம்பெற்று இருக்கும் இந் நற்செய்தியின் வழியே இயேசு கையாண்ட தொடர்பாடல் உத்திகளை பின்வருமாறு ஆராயலாம்.

## 1.3. தொடர்பாடல் வகைகள் (இயல்புகள்)

சமூக அனுபவங்களின் வெளிப்பாடாகத் தொடர்பாடல் அமைகின்றது. தொர்பாடலின் அடிப்படை மனித மனங்களிலேயே தங்கிநிற்கின்றது. மனம் மூளையுடன் சேர்ந்து செயற்படுகின்றது. இதன் விளைவாக தொடர்பாடல் நிகழ்கின்றது. அந்தவகையில் தொடர்பாடலை நான்கு வகைபடுத்தலாம்.

1. அகத் தொடர்பாடல்
2. ஆளிடைத் தொடர்பாடல்.
3. குழுத் தொடர்பாடல்.
4. வெகுஜனத் தொடர்பாடல்

அகத் தொடர்பாடல் என்பதோ மனித மனங்களிடையே ஏற்படுத்தப்படுவதும் மூளையால் செயற்படுத்தப்படுவதும் ஆகும். பல்வேறு தகவல்களைச் சேகரித்துக் கொள்வதும், அவற்றைத் தேவைக்கேற்ப பயன்படுத்துவதையுமே குறித்து நிற்கின்றது. இதன் பண்புகளாக

- ஓர் ஆளுக்குள் நிகழும் சுய தொடர்பாடல்.
- ஒவ்வொருவரும் குழந்தைப் பருவம் முதலே ஐம்புலன்களினாலும் தகவல் சேகரிக்கின்றனர்.
- திரட்டப்படும் தகவல்களில் குறிப்பிடத்தக்கவை அடி மனதிலே பதியப்படும்.
- சிலதகவல்கள் குறுங்கால ஞாபகத்துடன் நீங்கிவிடும்.
- அடி மனதிலே பதிந்துள்ள தகவல்களை வாழ்க்கையின் போது நினைவுபடுத்திக் கொள்ளலாம்.
- உள்ளகத் தொடர்பாடலின் தம்மிடமுள்ள தகவல்களைப் பயன்படுத்திக் கொள்வர்.
- தம்மிடம் உள்ள தகவல்கள் சிறந்ததாய் அமையும் போது தீர்மானம் எடுத்தல் சிறப்பாய் அமையும்.
- மிகச் சிறந்த தகவல்களை முடியுமான அளவு திரட்டிக்கொள்ள வேண்டும்.

- சுய எண்ணக்கரு உருவாக்கம் தம்மிடம் உள்ள தகவல்களின் அடிப்படையிலேயே நிகழும்.
- சுய பார்வை, சுய எண்ணக்கரு என்பன உள்ளகத் தொடர்பாடலின் முக்கியத்துவம் வாய்ந்தபண்புகள் ஆகும்.

ஆளிடைத் தொடர்பாடல் என்பதோ ஒருவர் மற்றவர்களுடன் தொடர்பாடும் போது நிகழ்வது ஆகும். கூட்டுத் தொடர்பாடலும் இத்தகையதே. ஆளிடைத் தொடர்பாடலில் இருவருக்கும் இடையிலே தகவல்கள் பரிமாறப்படுகின்றன. இதனால் இதனை ''சோடித் தொடர்பாடல்'' என்றும் அழைக்கின்றனர். சோடித் தொடர்பாடல் வாழ்க்கையில் பொதுவாக இடம்பெறும் ஒன்றாகும். சோடியைத் தாண்டிச் செல்லும் போது கூட்டுத் தொடர்பாடல் ஏற்படுகின்றது.

சிறு குழுவாகவோ அல்லது கூட்டமாகக் கூட கூட்டுத் தொடர்பாடல் அமையலாம். இதன் பண்புகளைப் பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

| **ஆளிடைத் தொடர்பாடல்** | **கூட்டுத் தொடர்பாடல்** |
|---|---|
| ➢ இரண்டு ஆட்களுக்கிடையிலான தொடர்பாடல்.<br>➢ நேருக்கு நேர்செய்யும் தொடர்பாடல்.<br>➢ நவீன தொழிநுட்பத்தால் இதன் வடிவம் மாற்றம் அடையும்.<br>➢ தொலைபேசி, இணையம், குறுஞ்செய்தி ஊடாகவும் இது நடைபெறும்.<br>➢ அன்றாட வாழ்வில் அதிகம் இடம் பெறும் தொடர்பாடல்.<br>➢ ஆளிடைத் தொடர்பாடலில் அனுப்புநர், பெறுநர் என்ற வகிபாகம் மாறிமாறி நிகழும்.<br>➢ பின்னூட்டல் காணப்படும். | ➢ பல ஆட்களுக்கு இடையே நிகழும் தொடர்பாடல்.<br>➢ இருவரைத் தாண்டிநிகழ்வது.<br>➢ இது சிறிய, நடுத்தர, பெரிய குழுக்களாக பிரிக்க முடியும்.<br>➢ ஒருவழி, இருவழி என இடம்பெறலாம்.<br>➢ பின்னூட்டல் காணப்படும். |

மேலும், வெகுஜனத் தொடர்பாடல் என்பது கூட்டுத் தொடர்பாடலின் வளர்ச்சிப் படிநிலையாகும். அதாவது குழு / கூட்டம் என்பது, மாபெரும் கூட்டமாக அமைகின்ற போது, அனுப்புநராலே பெறுநர்களைத் தனித்து பார்வையிட முடியாத அளவுக்கு கண்ணுக்கெட்டாத தூரம் வரையும், தமக்கு எதிரே இல்லாத பயனாளிகளுக்கும் தகவலை வளங்குவதையே குறித்து

நிற்கின்றது. இந் நிலையில் தகவலைப் பெறும் மாபெரும் மக்கள் தொகையையே (Mass) என்று ஆங்கிலத்தில் குறித்து நிற்கின்றது.

இதன் அம்சங்களாக :

- பெரும் தொகையான மக்களுடன் நிகளும் தொடர்பாடல்.
- பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்பன வெகுஜன ஊடகங்களாகும்.
- செய்தி பெறுவோர் யார் என்று அனுப்புநரால் திட்டவட்டமாக கூறமுடியாது.
- பொதுவாக நிறுவனமயப்பட்டதாக இருக்கும்.
- ஜனரஞ்சகத்தன்மை வாய்ந்தது. (தொலைக்காட்சி)

## 1.4. இயேசுவும் தொடர்பாடலும்.

யோவான் நற்செய்தியின் ஒளியிலே இயேசு தொடர்பாடலை மேற்கொண்ட சந்தர்ப்பங்களை இனம் கண்டுகொள்ளமுடியும். இயேசு இறைமகனாக வந்து இறையரசினைப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் அவர் தனது சொல், செயல் அனைத்திலும் சிறந்த விதத்திலே முன்னுதாரணமாக நிற்கின்றார். தான் எடுத்தபணியை செவ்வனே செய்வதற்கு அவரிடம் காணப்பட்ட தொடர்பாடல் திறன் இன்றியமையாதது எனலாம். தகவல்களை சேகரிப்பதும், அதனை சந்தர்ப்பத்துக்கு ஏற்ப பயன்படுத்துவதும் அவரது தனித்த ஆளுமையின் வெளிப்பாடாக அமைந்து நிற்கின்றது.

### 1.4.1 அகத்தொடர்பாடல்

அகத்தொடர்பாடல் என்பது ஒருவரின் மனதிலே எழுவதும், மூளையில் செயல்படுவதும், தகவல்களை சேகரிப்பதும், அதனைத் தேவைக்கேற்ப் பயன்படுத்துவதையுமே குறித்து நிற்கின்றது. இயேசுவும் இத்தகைய தொடர்பாடலை மேற்கொண்டுள்ளார்.

''அவர்கள் வந்து தம்மை பிடித்துக் கொண்டுபோய் அரசனாக்கப் போகிறார்கள் என்பதனை உணர்ந்த இயேசு மீண்டும் தனியாய் மலைக்குச் சென்றார்'' (யோ.6:15)[4] என்ற நற்செய்திப் பகுதியிலே இயேசு மனதால் உணர்ந்து சிந்தித்து செயற்பட்டிருப்பதனை கண்டுகொள்ளலாம்.

அதுபோலவே, ''இப்போது என் உள்ளம் கலக்கமுற்றுள்ளது. நான் என்ன சொல்வேன்?'' (யோ.12:27) என்று தனக்குள்ளே தனக்கு நடக்க இருக்கும் துயரினைக் குறித்து பேசியுள்ளதனைக் காணலாம். அதுமட்டுமன்றி, இறுதியாக சிலுவையிலே ''எல்லாம் நிறைவேறிற்று'' ( யோ.19:30)[6] என்று இயேசு கூறுவதும் தன்னகத் தொடர்பாடலுக்குச் சான்றாக அமைகிறது.

### 1.4.2 ஆளிடைத் தொடர்பாடல்

இருவருக்கு இடையிலே நிகழும் ஆளிடைத் தொடர்பாடல் வகையிலே யோவான் நற்செய்தியின் பின்னணியில் இயேசு கையாண்ட ஆளிடைத் தொடர்பாடல் சந்தர்ப்பங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

"பரிசேயர் ஒருவர் இருந்தார், அவர் பெயர் நிக்கதேம். அவர் யூதத் தலைவர்களுள் ஒருவர். அவர் ஓர் இரவில் இயேசுவிடம் வந்து "ரபி, நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பதை நாங்கள் அறிவோம்..." என்றார். இயேசு அவரைப்பார்த்து " மறுபடியும் பிறந்தாலான்றி எவராலும் இறையாட்சியை காண இயலாது"[7] என்றார் (யோ.3:2-3). இப்பகுதியில் இயேசு நிக்கதேம் என்ற தனிநபரோடு உரையாடுகின்றார். தான் சேர்த்து வைத்திருந்த தகவலை சரியாக இங்கே வழங்குவதைக் காணலாம்.

அதுபோன்று மிக முக்கியமான ஆளிடைத் தொடர்பாடல் பகுதியாக இயேசு மார்த்தா மற்றும் மரியாளோடு உரையாடுவதனைக் குறிப்பிடலாம்.

மார்த்தா இயேசுவை நோக்கி " ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்கமாட்டான். இப்போது கூட நீர் கடவுளிடம் கேட்பது எல்லாம் அவர் உமக்குக் கொடுப்பார் என்பது எனக்குத் தெரியும்" என்றார். இயேசு அவரிடம், "உன் சகோதரன் உயிர்த்தெழுவான்"[8] என்றார். (யோ.11:21-23) இவ் இறைவார்த்தைப் பகுதியும் தெளிவான ஆளிடைத் தொடர்பாடலுக்குச் சான்றாதாரமாக அமைகின்றது.

### 1.4.3 கூட்டுத் தொடர்பாடல் / குழுத் தொடர்பாடல்

இரண்டுக்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே இடம்பெறும் தொடர்பாடலே கூட்டுத் தொடர்பாடல் ஆகும். இயேசு இவ்வகைத் தொடர்பாடலில் ஈடுபட்டுள்ளமைக்கு யோவான் நற்செய்தி சான்று பகருகிறது.

இயேசு எருசலேமுக்குச் சென்ற வேளை கோவிலில் ஆடு, மாடு, புறா விற்போரையும், அங்கே உட்கார்ந்து இருந்த நாணயம் மாற்றோவோரையும் கண்டார். அப்போது "...அவற்றை இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள், என் தந்தையின் இல்லத்தைச் சந்தை ஆக்காதீர்கள்."[9] என்று கூறினார். (யோ.2:13-16)

இப்பகுதியிலும் இயேசுவின் குழுத் தொடர்பாடலை இனங்கண்டு கொள்ள முடியும். அதுபோன்று, யோவான் மற்றுமொரு சந்தர்ப்பத்தைத் தருகிறார். "... இயேசு கடல் மீது நடந்து

படகருகில் வருவதைக் கண்டு அஞ்சினார்கள். இயேசு அவர்களிடம் 'நான் தான் அஞ்சாதீர்கள்' என்றார்."[10] (யோ.6:16-20) இப்பகுதியிலும் இத் தொடர்பாடல் இயல்பைக் கண்டுகொள்ள முடியும்.

### 1.4.4. வெகுஜனத் தொடர்பாடல்.

மாபெரும் மக்கள் கூட்டத்தோடு மேற்கொள்ளப்படுகின்ற தொடர்பாடலாக வெகுஜனத் தொடர்பாடலைக் குறிப்பிடலாம். அந்தவகையில் இயேசு கையாண்ட தொடர்பாடல் சந்தர்ப்பங்களிற்கு சில எடுத்துக்காட்டுக்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

"இயேசு நிமிர்ந்து பார்த்து மக்கள் பெருந்திரளாய் அவரிடம் வருவதைக் கண்டு, "இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்?" என்று பிலிப்பிடம் கேட்டார். …. அமர்ந்திருந்த ஆண்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரம்."[11] (யோ.6:5-10) இப்பகுதி வெகுஜனத் தெடர்பாடலுக்கு சான்றாகும்.

அதுபோன்று (யோ.6:22-50) இப் பகுதியிலும் இயேசு தன்னிடம் உணவு வேண்டியோருக்கு பதில் கொடுப்பதும், "வாழ்வு தரும் உணவு நானே"[12] என்று கூறுவதும் வெகுஜனத் தொடர்பாடலின் பாற்பட்டதே ஆகும்.

## 1.5 இயேசு கையாண்ட தொடர்பாடல் வகைகள்.

யோவான் நற்செய்தியின் ஒளியிலே இயேசுவின் தொடர்பாடல் சந்தர்ப்பங்களைப் பகுப்பாய்வு செய்வதனூடாக அவற்றின் இயல்புகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

| அகத் தொடர்பாடல் | ஆளிடைத் தொடர்பாடல் | கூட்டுத் தொடர்பாடல் | வெகுஜனத் தொடர்பாடல் |
|---|---|---|---|
| அப்பம் பகிர்ந்து அளித்த பின் தனியாக மலைக்குச் செல்லல். (யோ.6:1-15)<br><br>இயேசுதனிமையில் செபித்தல். (யோ.18:12-15) | சீடரைத் தெரிவு செய்தல். (யோ.1:35-42)<br><br>கானாவூர் திருமணம். (யோ.2:1-12)<br><br>இயேசுவும் நிக்கதேமுவும். (யோ.3:1-21)<br><br>சமாரியப் பெண்ணும் | அப்பம் பகிர்ந்து அளித்தல். (யோ.6:1-15)<br><br>விபசாரத்தில் பிடிபட்ட பெண். (யோ.6:1-30)<br><br>இயேசு கடலில் | அப்பம் பகிர்ந்து அளித்தல். (யோ.6:1-15)<br><br>உணவு வேண்டல். (யோ.6: 22-23)<br><br>இயேசு திருவிழாவுக்குச் |

| | | | |
|---|---|---|---|
| இயேசுவை சிலுவையில் அறைதல். யோ.19:25-30) | இயேசுவும் (யோ.4:1-42) | மீது நடத்தல். (யோ.6:1-30) | செல்லுதல். (யோ.7:1-24) |
| | அரச அலுவலர் மகன் குனமாதல். (யோ.4:43-54) | கோவில் அர்ப்பண விழா. (யோ.6:1-30) | இறுதிப் பாஸ்கா விழா. (யோ.11:55-58) |
| | உடல் நலமற்றவர் நலமடைதல். (யோ.5:1-18) | இயேசு சீடர்களின் பாதங்களை கழுவுதல். (யோ.13:1-10) | |
| | அப்பம் பகிர்ந்து அளித்தல். (யோ.6:1-15) | | |
| | விபசாரத்தில் பிடிபட்ட பெண். (யோ.6:1-30) | இயேசுவை கைது செய்தல். (யோ.18:1-30) | |
| | பிறவியிலே பார்வையற்றவர் பார்வை பெறுதல். (யோ.9:1-12) | உயிர்த பின் சீடர்களை சந்தித்தல். (யோ.20:1-10) | |
| | நம்புவோர் வாழ்வர். (யோ.11:17-27) | | |

அகத் தொடர்பாடல் - 3 சந்தர்ப்பங்கள்

ஆளிடைத் தொடர்பாடல் - 17 சந்தர்ப்பங்கள்

கூட்டுத் தொடர்பாடல் - 16 சந்தர்ப்பங்கள்

வெகுஜனத் தொடர்பாடல் - 4 சந்தர்ப்பங்கள்

**1.6. தொடர்பாடலின் போது இயேசு எதிர்கொண்ட சாவல்களும் - தீர்வுகளும்.**

வளர்ச்சியை தூண்டும் உறவுகளில் மனிதத் தொடர்பாடல் மிக முக்கியமானது ஒவ்வொரு மனித நடத்தையின் அடியிலும் ஒரு பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவை இருக்கும். இதனை விளங்கிக் கொண்டு அந்தத் தேவையை ஏற்றுக் கொண்டு, தொடர்புகளை மேற்கொள்ள

முனையும் போது அது இலகுவில் வெற்றி பெறும். இந்தத் தன்மையினை நன்கு அறிந்து தொடர்பாடலை மேற்கொண்டவராக இயேசுவைக் கண்டுகொள்ளலாம். இயேசுவும் தமது நோக்கத்தை நிறைவேற்ற கையாண்ட முறைகள் பின்வருமாறு.

1. தகவல்களைப் பெறல்
2. தகவல்களைச் சேமித்துப் மீளப்பயன்படுத்தல்.
3. தகவல்களை வழங்குதல்

என்ற நிலைகளிலே எதிர்கொண்ட சவால்களையும், அதனை வெற்றி கொண்ட உத்திகளையும் பின்வருமாறு ஆராயலாம்.

### 1.6.1 தகவல்களைப் பெறல்.

இயேசு வாழ்ந்த காலத்தில் அவரை யூதர்களில் பெரும்பாலானோரும் குறிப்பாக சதுசேயர்கள், பரிசேயர்கள் போன்றோரும் வெறுத்தனர். இவர்களிடத்தே தன்னை ஏற்றுக் கொள்ளும்படி அவர் பல்வேறு தொடர்பாடல் உத்திகளைக் கையாண்டுள்ளார்.

''உலகின் ஒளி நானே… பரிசேயர் ''உம்மைப் பற்றி நீரே சான்று பகர்கிறீர், உம் சான்று செல்லாது'' என்றார். (யோவான் .8:12-13) இத்தகைய சூழ்நிலையிலே ஒருவரது கருத்து அடியோடு மறுதலிக்கப்படுகின்றது. இயேசுவால் தாமே மெசியா என்பதை எடுத்துரைக்கும் வழி அடியோடு மூடப்படுகின்றது. பெறுநர் தகவலை மறுதலிப்பதோடு உண்மையான தகவல்களை ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டுகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்திலே எவ்வாறு செயல் ஆற்ற வேண்டும் என்பதனை நாம் இயேசுவிடம் இருந்து கற்றுக்கொள்ளலாம்.

''உம் தந்தை எங்கே இருக்கிறார்?'', ''நீ யார்?'' என்ற அடுக்கடுக்கான கேள்விகளுக்கு மத்தியில் இயேசு தர்க்க ரீதியான நியாயப்பாடுகளை முன்வைக்கிறார் ''… உங்கள் சட்டத்தில் எழுதியுள்ளது அல்லவா?'', ''உங்களுக்கு என்னையும் தெரியாது என் தந்தையையும் தெரியாது?'' ''நான் போகும் இடத்திற்கு உங்களால் வர இயலாது'', ''நான் இவ்வுலகைச் சார்ந்தவன் அல்ல''. இவ்வாறாக அவர் தமது நோக்கை இறுதியிலே வெற்றியாக கொள்வதனைக் காணலாம். ''அவர் இவற்றைச் சொன்னபோது பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்''[14] (யோ. 8:12-30) இதனூடாக தகவலைப் பெற்றுக்கொள்வதில் அவர் எதிர் கொண்ட இடர்ப்பாட்டையும், தர்க்கரீதியான விவாதம் அல்லது சான்றுகள் ஊடாக தகவலையும், நோக்கத்தையும் நிறைவேற்றிக் கொண்டதையும் காணலாம்.

### 1.6.2 தகவல்களைச் சேமித்து மீளப்பயன்படுத்தல்.

இம் முறையானது தொடர்பாடலிலே முக்கியமான அம்சமாகும். தாம் ஏற்கனவே பெற்றுக் கொண்ட தகவல்களைச் சேர்த்து – சேமித்து வைத்தல் இச் செயற்பாட்டை இயேசு எவ்வாறு எதிர்கொண்டார் என்று நோக்கும் போது.

இயேசுவும் ஆப்பிரகாமும் என்ற பகுதியிலே (யோ 8: 48-59) யூதர்களுக்கும் இயேசுவுக்கும் இடையே ஒரு காரசாரமான விவாதம் இடம்பெறுகின்றது. குறித்த பகுதியின் இறுதி வரிகள் அவர் எதிர் கொண்ட சவாலை வெளிப்படுத்துகின்றன.

''ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.'' என்றார். இதைக் கேட்ட அவர்கள் அவர் மேல் எறியக் கற்களை எடுத்தார்கள் ஆனால் இயேசு மறைவாக நழுவிக் கோவிலிருந்து வெளியேறினார்.[15]

இயேசு இங்கே தம்மை வெளிப்படுத்த தகவல்ளைச் சேகரித்து கையாளுவதனைக் காணலாம். ஆபிரகாம் குறித்தும், தம் தந்தையைக் குறித்தும் தமது தகவல்களைச் சேகரித்து வைத்திருப்பதனைக் காணலாம். தொடர்பாடலில் எதிர்ப்பின் போது அமைதி காத்தலும், விட்டு விலகுதலுமாகிய உத்திகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

### 1.6.3 தகவல்களை வழங்குதல்

விபசாரத்தில் பிடிபட்ட பெண் ஒருத்தியை இயேசுவிடம் கூட்டி வந்து தீர்ப்பு வழங்குமாறு மறைநூல் அறிஞரும், பரிசேயரும் சோதிக்கின்றனர்.

''இப்படிப்பட்டவர்களை கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பதே மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்தில் உள்ள கட்டளை. நீர் என்ன சொல்கிறீர்?'' இதன் உள் நோக்கம் பற்றி யோவோன் அழகாக விபரித்துள்ளார். இதனூடாகத் தன்னைக் குற்றவாளி ஆக்குவதற்கு முனைகின்ற ஒரு தொடர்பாடல் இடர்ப்பாட்டை இயேசு எவ்வாறு எதிர் கொண்டார் என்பது பற்றித் திருவிவிலியம் பின்வருமாறு கூறுகிறது. 'அவர் குனிந்து விரலால் தரையில் எழுதிக் கொண்டிருந்தார்.' மீண்டும் விடாமல் அவரைக் கேட்டுக் கொண்டிருந்ததால் ''உங்களுக்குள் பாவம் இல்லாதவர் முதலில் இப் பெண்மேல் கல் எறியட்டும்.'' என்று அவர்களிடம் கூறினார்.[16]

இவ்வாறாக, பொறுமையோடு தாம் திருச்சட்டங்களில் கற்றுத் தேர்ந்த தகவல்களை சரியாகப் பயன்படுத்தி தப்பித்துக் கொள்வதனைக் காணலாம்.

## 1.7 நிறைவுரை

புதியதோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு வழிகாட்டும் இயேசுவின் தொடர்பாடல் உத்திகள் என்று ஆராய்ந்த போது அவர் கையாண்ட பல்வேறு உத்திகளை இனங்கண்டு கொள்ளமுடிகின்றது. இத்தனை தொடர்பாடல் சாவல்களையும் அவர் வெற்றி கொள்வதற்கு அவரிடம் காணப்பட்ட தொடர்பாடல் திறன்கள் மிக முக்கியமானவையாக அமைந்து விடுகின்றன.

தொடர்பாடல் திறன்களாக செவிமடுத்தல், புரிந்துணர்வு, கரிசனைகாட்டுதல், தொடுகை, எப்போதும் நம்பிக்கைக்கு உரியவராக இருத்தல், ஏற்றுக் கொள்ளலும் விட்டுக்கொடுத்தலும், தீர்ப்பிடாமல் இருத்தல், அன்பு செய்தல், பிறரை மதித்தல் இத்தகைய தொடர்பாடல் திறன்களை இயேசு நமக்குத் கற்றுத் தருகின்றார்.

எனவே தொகுத்து நோக்கும் போது யோவான் நற்செயதியாளர் விபரிக்கும் மற்றும் சான்று காட்டும் இயேசுவினது தொடர்பாடல் உத்திகளையும் மற்றும் அவரது திறன்களையும் வளர்ப்பதன் மூலமாக புதியதோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண்பாட்டைக் கட்டியெழுப்ப முடியும் எனலாம்.

## துணைநின்ற நூல்கள்.

1. திருவிவிலியம், பொதுமொழி பெயர்ப்பு,(2016), தமிழ்நாடு Biblical catechetical & liturgical. Centre. திண்டிவனம்.

2. இளங்கோவன்.மா.ரா, 1981, இதழியல் நோக்கு, வெற்றி அச்சகம், சென்னை.

3. இராசா. கி, 2005, இதழியல், தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், சென்னை.

4. இன்னாசி, மா.எட்வர்ட் சாலமோன்ராஜா, 2006, இதழியல் அவ்வை அச்சுக்கூடம், சென்னை.

5. கிருட்டினசாமி.வெ, 2006, தகவல் தொடர்பியல், மணிவாசகர் பதிகம், சென்னை. முத்துராசன்.கு இதழியல், வானவில் புத்தகாலயம், சென்னை.

6. முத்துராசன்.கு, 2001, இதழியல் வளர்ச்சியும் மொழிபெயர்ப்பும், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

7. மணிமேகலை பிரசுர ஆசிரியர் குழு, 2001, பத்திரிகையியல், உலகப் பத்திரிகையின் தோற்றமும் வளர்ச்சியும், சென்னை.

8. பெருமாள்.எஸ், 2002, பத்திரிகைத்துறை சில நினைவுக் குறிப்புகள், பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்.

- **ஆங்கில நூல்கள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள்**

**1) நூல்கள்**

1. Thomas Rolnicki, Sxholastical journalism, edition – 11, blackewel publishing, LTD, Uk, 2007

**2) ஆய்வுக்கட்டுரைகள்**

01. Alieza Bonyadi, Moses Samuel (2014), Headlines in Newspaper Editorials, A Contrastive study, Islamic Azad university of Malaysia, SAGE OPEN publication.

02. Angela M. Lee (2012 april 21), audience preference and Editorial judgment A study of time – Lagged influence in online News, School of journalism, the university of Texan at Austin.